**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்**
**முன்னிலை: திருமதி.எஸ்.சப்னா,B.B.M.,L.L.M.,**
**நீதித்துறை நடுவர், பல்லடம்**
**2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 08 ஆம் நாள் சனிக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057, பராபவ வருடம் ஆடி திங்கள் 23 ஆம் நாள்**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 15/2017**
**CNR No.TNTI11 000122 2017**

அரசுக்காக:
காவல் ஆய்வாளர்,
பல்லடம், காவல்நிலையம்,
குற்ற எண்.942/2016) ... புகார்தாரர்

– எதிர் –

பிரகாஷ் (வயது 25),
த/பெ. பழனி,
16/14 மாரப்பகவுண்டம்பாளையம்,
நந்தவனம்பாளையம்,
தாராபுரம், திருப்பூர் மாவட்டம். ... எதிரி

**குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், பல்லடம்**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.15/2017**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 தேதியிட்ட ROC. No. 814/2020 F1 (P.Dis.No.36/2021) படியும் விதி 106 Criminal Rules of Practice – 2019 ன்படியும் வழக்கின் தொகுப்பு கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

| S.No. | Case summary | | | |
|---|---|---|---|---|
| (I) | The Period of remand of the accused | Name of the accused | Date of Remand | Release on |
| | | Prakash | 21.08.2016 | 21.08.2016 |
| (ii) | Date of filling of the complaint/ final report in the court | Filling of Complaint | Filing of Final report | |
| | | Complaint Statement on 20.08.2016 | பல்லடம் குற்றவியல் நீதித் துறை நடுவர் நீதிமன்றத்தில் 25.01.2017 தேதியன்று தாக்கல் செய்யப் பட்டது. | |
| (iii) | Date of Committal of the case to the court of Sessions | Not applicable | | |
| (iv) | Date of Questioning of | 23.03.2017 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | the accused under section 279, 304(A) of IPC as the case may be | | | |
| (v) | Filing of all Miscellaneous petitions and their results | Crl.M.P.No. | Date of filing | Result |
| | | - | - | - |
| (vi) | Date of Examination in chief and cross | Name of the Examination | Date of Chief | Date of Cross |
| | | PW1- Mahalakshmi | 09.06.2022 | 09.06.2022 |
| | | PW2 – Senthilkumar | 08.06.2026 | - |
| | | PW3- Manokar | 22.07.2026 | 22.07.2026 |
| | | PW4- Myilsamy | 22.07.2026 | 22.07.2026 |
| | | PW5- Thangaraju | 22.07.2026 | 22.07.2026 |
| (vii) | Date of Examination of the accused under section 313 of the Code | | | 27.07.2026 |
| (viii) | Details of abscond of an accused and his appearance/production, as the case may be | | | Nil |
| (ix) | Grant of stay by Superior Courts and the results there of | | | Nil |

இந்த வழக்கானது கடந்த 25.01.2017 ஆம் தேதிCC.No.15/2017–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசுக்காக அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.S.செந்தில் குமார் அவர்களும், எதிரிக்காக எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.வெங்கடாசலபதி, அவர்கள் முன்னிலையாகியும் கடந்த 27.07.2026 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது இருதரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப் பட்டு, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

1)கடந்த 20.08.2016 ம் தேதி காலை 8.30 மணிக்கு பல்லடம் பகுதிக்குட் பட்ட பல்லடம்–திருச்சி ரோடு பனப்பாளையம் தாராபுரம் ரோடு பிரிவு லோகேஸ்வரா பேக்கரி அருகில் எதிரி பிரகாஷ் TN 42 F 3389 என்ற எண்ணுள்ள Mahindra Torister 32 Seater வேனை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிசென்று சம்பவ இடத்தில்

அதே ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி TN 47 Y 9929 என்ற எண்ணுள்ள Hero Honda Splendor மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த செல்வராஜ் என்பவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியும் மேற்படி விபத்தில் செல்வராஜ்க்கு தலை, வாய், மூக்கு ஆகிய பகுதிகளில் ரத்த காயத்தையும் வலது கால் முட்டி, வலது கால் பாதத்தில் ரத்த காயம் மற்றும் இடது கை மணிக்கட்டில் ரத்த காயத்தையும் ஏற்படுத்தி செல்வராஜுக்கு இறப்பை ஏற்படுத்தியதாக எதிரி மீது சட்டப் பிரிவுகள் 279, 304(A)இதசவின் கீழ் பல்லடம், காவல்நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2)எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலை ஆனவுடன் எதிரிக்கு அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207ன் கீழ் கட்டணமின்றி வழங்கப்பட்டது.

**<u>குற்றத்தின் சாராம்சத்தையும் குற்றத்தினையும் விவரித்தல்:</u>**

3)எதிரிக்கு போதியகால அவகாசம் கொடுக்கப்பட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களுக்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 304(A)இதசவின் கீழான குற்றம் பற்றி, விளக்கி கூறி வினவியபோது எதிரி குற்றங்களை மறுத்து கூறி சாட்சிகளை விசாரணை செய்ய வேண்டினார். எனவே அரசுதரப்பு சாட்சிகளை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

4)அதன்படி, அரசுதரப்பில் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 10வரை பட்டியலிடப் பட்டு, எதிரி மீதான குற்றத்தினை நிரூபிக்கும் வகையில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப் பட்டுள்ளது.

**<u>5) அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

இவ்வழக்கானது கரூர், கிருஷ்ணராயபுரம், வலையகாரன்புதூரை சேர்ந்த

மகாலட்சுமி என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் தொடரப் பட்டுள்ளது. அவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் அ.சா.ஆ.1 புகார் குறியீடு செய்யப் பட்டுள்ளது. அ.சா.1 அவரது புகாரில் தான்மேலே உள்ள விலாசத்தில் அவரது குடும்பத்துடன் குடியிருந்து வருவதாகவும் அ.சா.1 க்கு திருமணமாகி விசால் என்ற மகனும், சங்கீதா என்ற மகளும் உள்ளதாகவும் அவரது கணவர் செல்வராஜ் காங்கயத்தில் உள்ள லட்சுமி இன்ஜினியரிங் ஓர்க்ஷாப்பில் வேலை செய்து வந்ததாகவும் கடந்த 19.08.2016 ம் தேதி இரவு வேலை முடித்துவிட்டு கரூர் வீட்டிற்கு வந்ததாகவும் கடந்த 20.08.2016 ம் தேதி காலை கோயம்புத்தூர் பக்கமாக வேலை உள்ளதாக புறப்பட்டு ஹீரோ ஹோண்டா மோட்டார் சைக்கிள் TN 47 Y 9229 என்ற வண்டியில் புறப்பட்டு வந்ததாகவும் காலை 9.00 மணியளவில் போன் மூலம் அவரது கணவர் செல்வராஜ் பல்லடம் பனப்பாளையம் தாராபுரம் ரோடு பிரிவு அருகே காலை 8.30 மணிக்கு ரோட்டில் மேற்கே ஓட்டிச் சென்றபோது அதே ரோட்டில் மேற்கே இருந்து கிழக்கே அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் TN 42 F 3389 என்ற மகேந்திரா வேனின் ஓட்டுநர் பிரகாஷ் வேனை ஓட்டி வந்து அவரது கணவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதில் அவரது கணவருக்கு அடிபட்டு மருத்துவமனைக்கு கூட்டி செல்வதாக தகவல் சொன்னததில் பேரில் புறப்பட்டு அ.சா.1 ம் அவரது அண்ணன் ரவிக்குமார் அம்மா பாப்பாயி ஆகியோருடன் பல்லடம் வந்து விசாரிக்க அவரது கணவர் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு போய் சேர்த்தபோது டாக்டர் பரிசோதித்துவிட்டு இறந்துவிட்டதாகவும் தெரிந்து கொண்டதாகவும் அவரது கணவரின் பிரேதம் பல்லடம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் உள்ளது என்றும் அவரது கணவர் மீது மோதி விபத்து ஏற்படுத்திய மகேந்திரா வேன் ஓட்டுநர் TN 42 F 3389 ஓட்டுநர் பிரகாஷ் மீது நடவடிக்கை எடுக்குமாறு கூறப்பட்டுள்ளது.

6)இவ்வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக அ.சா.2 செந்தில் குமார் என்வரும் பார்வை மகசர் சாட்சியாக அ.சா.3 மனோகரன் என்பவரும்

விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

7)இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.4 மயில்சாமி, காவல் உதவி ஆய்வாளர் அவரது சாட்சியத்தில் கடந்த 20.08.2016 ஆம் தேதி பல்லடம் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கரூர் வளையகாரன் புதூரை சேர்ந்த செல்வராஜ் மனைவி மகாலட்சுமி என்பவர் நிலையம் ஆஜராகி தனது கணவர் செல்வராஜ் 20.08.2016 ஆம் தேதி காலை மோட்டார் சைக்கிளில் TN 47 Y 9229 என்ற மோட்டார் சைக்கிளில் பல்லடம் –திருச்சி ரோடு பனப்பாளையம் பிரிவு அருகே காலை 8.30 மணிக்கு மேற்கே ஓட்டிச் சென்றபோது அதே ரோட்டில் மேற்கே இருந்து கிழக்கே அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் TN 42 F 3389 என்ற மகேந்திரா வேனை அதன் ஓட்டுநர் பிராகஷ் என்பவர் ஓட்டி வந்து தனது கணவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதில் கணவர் அடிப்பட்டு மருத்துவ மனைக்கு கூட்டி செல்வதாக கிடைத்த தகவலின் பேரில் தானும் தனது அண்ணன் ரவிக்குமார், அம்மா பாப்பாயி ஆகியோருடன் பல்லடம் அரசு மருத்துவமனையில் வந்து விசாரித்து தனது கணவர் விபத்தில் இறந்து சவக்கிடங்கில் பிரேதம் இருப்பதாக தெரிந்துக் கொண்டதாகவும் விபத்தை ஏற்படுத்திய மகேந்திர வேனின் ஓட்டுநர் பிரகாஷ் மீது நடவடிக்கை எடுக்குமாறு அன்று 11.45 கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று பல்லடம் காவல் நிலைய குற்ற எண் 942/2016 பிரிவுகள் 279,304(A) இதசவின் கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் வழக்கு கோப்பை அ.சா.4 புலன் விசாரணைக்கு பல்லடம் காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாக சாட்சியம்அளித்துள்ளார்.

8)இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5 தங்கராஜு, காவல் ஆய்வாளர் அவரது சாட்சியத்தில் கடந்த 20.08.2016 ஆம் தேதி பல்லடம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது பல்லடம்

காவல் நிலைய குற்ற எண் 942/2016 பிரிவுகள் 279,304(A) இதசவில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணைக்காக பார்வைக்கு வைத்த வழக்கு கோப்பினை அ.சா.5 புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 20.08.2016 ஆம் தேதி பகல் 12.45 மணிக்கு சாட்சி பாலாஜி மற்றும் மனோகரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் பின்னர் பல்லடம் அரசு மருத்துவமனை சென்று காலை 7.30 மணிக்கு வழக்கில் இறந்துபோன செல்வராஜ் என்பவர் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்பு அ.சா.ஆ.5 பிரேத விசாரனை செய்து அறிக்கை தயார் செய்ததாகவும் பிரேதத்தினை இறப்பின் காரணம் அறியும் பொருட்டு பிரேதத்தினை தலைமை காவலர் 1041 திரு.வெங்கடாசலம் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்ததாகவும் பின்னர் சாட்சிகள் மகாலெட்சுமி, செந்தில்குமார், பாண்டி, பாப்பாயி, ரவிக்குமார், மனோகரன், பாலாஜி ஆகியோரை தனி தனியாக விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்ததாகவும் வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனங்களான TN42 F 3389 என்ற மகேந்திரா வேனையும் வழக்கில் மற்றொரு வாகனமான TN 47 Y 9229 என்ற Hero Honda Splendor மோட்டார் சைக்கிளையும் மோட்டார வாகன ஆய்வாளருக்கு மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தியதாகவும் பின்னர் 02.09.2016 ஆம் தேதி திருப்பூர் தெற்கு வட்டார போக்குவரத்து அலுவலர் நடேஷ் அவர்களை விசாரித்து அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆய்வறிக்கைகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் பின்னர் வழக்கில் காயம்பட்ட இறந்து போன செல்வராஜ் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்ட பல்லடம் அரசு மருத்துவமனை மருத்துவர் சுபா அவர்களை விசாரித்து அசா.ஆ.8 உடற்கூறாய்வு பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் மயில்சாமி அவர்களை விசாரித்து இத்துடன் புலன் விசாரனை முடித்து 02.09.2016 ஆம் தேதி எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 304(A)

இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக கூறப் பட்டுள்ளது.

**9)கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)ன் கீழ் எதிரியிடம் வினவப்பட்ட வினாவிற்கான பதில்:**

அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச.313(i)(b) பிரிவின் கீழ் வினவியபோது எதிரி சாட்சிகள் அனைத்தையும் பொய் சாட்சிகள் என்றும், பொய் வழக்கு என்று தெரிவித்தும், மேலும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததால் எதிரி தரப்பு சாட்சிகள் இல்லை என்று முடிக்கப் பட்டது.

**அரசு தரப்பு வாதம்:**

10)அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சியங்கள் மூலம் எதிரி மீதான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.4 மற்றும் புலன் விசாரணை செய்த அதிகாரியான அ.சா.5 ன் சாட்சியத்தின் மூலம் அரசுதரப்பு வழக்கு மற்றும் அரசுதரப்பு சான்றாவணங்கள் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது என்றும், எனவே அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப் பட்டுள்ள பிரிவுகள் 279, 304(A)இதசவின் கீழான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுவிட்டதாகவும், எனவே எதிரிக்கு பிரிவுகள் 279, 304(A)இதசவின் கீழான குற்றத்திற்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

**எதிரி தரப்பு வாதம்:**

11)இவ்வழக்கில் குற்றயிறுதியறிக்கை மற்றும் அதனுடன் தாக்கல் செய்யப் பட்ட ஆவணங்களின் வாயிலாக எதிரி மீது சுமத்தப்பட்டு இருக்கும் குற்றங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 240 ன் கீழ் வினவியபோது, இவ்வழக்கு பொய் வழக்கு என்று கூறி, அரசுதரப்பு வழக்கை மறுத்துள்ளார். மேலும், அரசுதரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அதில் எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச. 313(i)(b) பிரிவின் கீழ்

எதிரியிடம் வினவியபோது, சாட்சிகள் அனைத்தும் பொய்சாட்சிகள் என்று கூறி அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்து உள்ளார்.

12)மேலும் எதிரி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தின் போது வழக்கு விபத்தானது எவ்வாறு யாருடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்று யாரும் சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ளசாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் எதிரியின் அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் காரணம் என்பதாக அரசுத்தரப்பில் தகுதிநிலை ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க வில்லை என்றும், அதனால் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார். ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய பொருண்மை:</u>**

13)இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும்போதுஅ.சா.1 மகாலட்சுமி அவரது சாட்சியத்தில் இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன செல்வராஜ் தனது கணவர் என்றும் கடந்த 20.08.2016ம் தேதி அவரது கணவர் கரூரிலிருந்து கோயம்புத்தூருக்கு வேலையாக TN47 Y 9229 என்ற ஸ்பிளண்டர் இருசக்கர வாகன்ததில் பல்லடம் – திருச்சி ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்காகவந்து கொண்டிருந்தபோது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி பிரகாஷ் என்பவர் 3338 என்ற எண் கொண்ட மகேந்திரா வேனை ஓட்டி வந்து தாராபுரம் பிரிவு அருகே சுமார் 8.30 மணிக்கு அவரது கணவர் வாகனத்தின் மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும் அருகிலிருந்த செந்தில் என்ற நபர் அ.சா.1 க்கு போன் மூலம் தகவல் சொன்னதாகவும் அ.சா.1ம் அவரது அம்மா அண்ணன் ரவிக்குமார் ஆகியோர் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தபோது அவரது கணவர் பரிசோதித்துவிட்டு இறந்துவிட்டதாக சொன்னதாகவும் பல்லடம் காவல் நிலையத்தில் அ.சா.ஆ.1 புகார்

கொடுத்ததாகவும் புகாரினை தான் சொல்ல சொல்ல எழுதினார்கள் போலீசார் வழகககு பதிவு செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

14)மேலும், அ.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் விபத்து குறித்து தனக்கு தெரிந்த நபர் ஒருவர் எழுதிக் கொடுத்ததாகவும் போலீசார் அ.சா.1 ஐ காவல் நிலையத்தில் வைத்து விசாரித்ததாகவும் அதற்கு பின்னிட்டு கரூர் வந்து விசாரித்ததாக சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது.

15)இவ்வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.2 செந்தில்குமார் அவரது சாட்சியத்தில் அ.சா.2 பல்லடம் – தாராபுரம் ரோட்டில் பேக்கரி கடை வைத்துள்ளதாகவும் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகமில்லை ஒரு நாள் காலையில் அ.சா.2 பேக்கரியில் இருந்தபோது திருச்சி – பல்லடம் ரோட்டில் இருசக்கர வாகனம் கிழக்கில் இருந்து வந்தது என்றும் ஒரு வேன் வந்து மோதியது விபத்து ஏற்பட்டது சத்தம் கேட்டு அ.சா.2 கடையில் இருந்து வந்து பார்த்ததாகவும் அவரது கடையில் இருந்த மாஸ்டர் போய் பார்த்ததாகவும் அவருக்கு காயம் ஏற்பட்டதாக பேக்கரி கடை மாஸ்டர் சொன்னார் அந்த மாஸ்டர் பெயர் பாண்டி அவர் தற்சமயம் அ.சா.2 ன் கடையில் வேலை பார்க்கவில்லை என்றும் விபத்திற்கு பிறகு ஆம்புலன்ஸ் மூலம் பல்லடம் அரசு மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்ததாகவும் இது சம்மந்தமாக போலீசார் அ.சா.2 ஐ விசாரித்ததாக அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

16)இவ்வழக்கின் பார்வை மகசர் சாட்சியான அ.சா.3 மனோகரன் அவரது சாட்சியத்தில் கடந்த 2016 ஆம் வருடம் ஒரு நாள் மதியம் 12.30 மணியளவில் அ.சா.3 ம் அவரது நண்பர் பாலாஜி என்பவரும் பல்லடம்–திருச்சி ரோடு பனப்பாளையம் தாராபுரம் பிரிவு அருகில் உள்ள லோகேஸ்வரா பேக்கரிக்கு டீ சாப்பிட சென்றபோது அங்கு நடந்த விபத்து சம்மந்தமாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார்

செய்ததாகவும் அதற்கு சாட்சியாக அ.சா.3 ம் பாலாஜியும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் பார்வைமகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.2 என்றும் போலீசார் தன்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவரது குறுக்கு விசாரணையில் அ.சா.3 கையொப்பம் செய்த தாளில் உள்ள விவரங்கள் என்ன என்று அ.சா.3 க்கு தெரியாது என்றால் சொன்னார்கள் அ.சா.3 படித்து பார்க்கவில்லை என்றும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்ததாக ஒப்புக்கொண்ட நிலையில் அ.சா.3 ன் சாட்சியத்தின் மூலம் அ.சா.ஆ.2 ஆவணத்தின் உண்மைத் தன்மை நிரூபணம் செய்யப் படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

17)அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் எதிரி மீதான குற்றச்சாட்டானது நிரூபிக்கப் படவில்லை என்றும் மேலும் அ.சா.1 அவரது முதல் விசாரணையில் புகாரினை அ.சா.1 சொல்ல சொல்ல வேறொரு நபர் எழுதிக் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படியான விவரம் எதுவும் அ.சா.ஆ.1 புகாரில் கூறப் படவில்லை. மேலும் வழக்கு விபத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. பார்வை மகசர் சாட்சியான அ.சா.3 போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளிக்கப்பட்டுள்ள நிலையில் அரசு தரப்பில் சாட்சி சான்றாவணங்கள் மூலம் வழக்கு விபத்திற்கு எதிரியின் அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் காரணம் என்பதாகவோ எதிரியை அடையாளப் படுத்தியோ எவ்வித சாட்சியம் அளிக்காத நிலையில் எதிரி மீதான குற்றச் சாட்டானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப் படவில்லை. எனவே, எதிரி மீதான குற்றச் சாட்டிலிருந்து எதிரியை விடுதலை செய்யலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

18)முடிவில் எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழான குற்றச்

சாட்டிலிருந்து குற்றவாளி இல்லை என தீர்மானித்து குவிமுச பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

19)இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்பட்டு ஆஜர்படுத்தப் படவில்லை.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப் பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப் பட்டு, பிழைகள் திருத்தம் செய்யப் பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 08 ம் நாளில் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப் பட்டது.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2026.08.08 14:13:54 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 09.06.2022 | திருமதி.மகாலட்சுமி த/பெ. செல்வராஜ் –புகார்தாரர் |
| அ.சா.2 | 08.06.2026 | திரு.செந்தில்குமார் த/பெ. சாமிநாதன் – கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | 22.07.2026 | திரு.மனோகர் த/பெ. முத்துகிருஷ்ணன் – பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.4 | 22.07.2026 | திரு.மயில்சாமி, காவல் உதவிஆய்வாளர் – முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அதிகாரி |
| அ.சா.5 | 22.07.2026 | திரு.தங்கராஜூ, காவல் ஆய்வாளர், புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1/அ.சா.1 | 20.08.2016 | புகார் |
| அ.சா.ஆ.2/அ.சா.3 | 20.08.2016 | பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.3/அ.சா.4 | 20.08.2016 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4/அ.சா.5 | 20.08.2016 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 /அ.சா.5 | 20.08.2016 | இறந்துபோன செல்வராஜ் என்பவரின் பிரேத |

விசாரணை அறிக்கை

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.6 /அ.சா.5 | 26.08.2016 | TN 47 Y 9229 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.7/அ.சா.5 | 22.08.2016 | TN 42 F 3389 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.8/அ.சா.5 | 20.08.2016 | இறந்துபோன செல்வராஜ் என்பவரின் உடற் கூராய்வு அறிக்கை |

**அரசு தரப்பு சான்றுப் பொருட்கள்:** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணம் மற்றும் சான்றுப் பொருட்கள்:** இல்லை.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2026.08.08 14:14:01 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

**குறிப்பு**

1) எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்பட்டார்.
2) வழக்கு விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்து வந்தார்.
3) வழக்கு முடிவின் விவரம் தக்க காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.
4)வழக்கின் விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப் படவில்லை.
5)தீர்ப்பின் நகல் மேன்மைமிகு திருப்பூர், தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.